செ.வெ.எண்: 18 / ஜூலை நாள் : 09.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற "இளம் வாக்காளர்களை சேர்ப்பதற்கான முதற்கட்ட சிறப்பு முகாமினை" மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு வாக்குச்சாவடி மையங்களில் இன்று (9.07.2017) நடைபெற்ற இளம் வாக்காளர்களை சேர்ப்பதற்கான முதற்கட்ட சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, ஜூலை 1-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை 18 முதல் 21 வயது நிரம்பியவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 18 வயது பூர்த்தியானவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்துக்கொள்ள ஏதுவாகவும், இறந்தவர்கள்,இடம் மாறியவர்களை, நீக்கம் செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கு பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக 9.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய இரண்டு தினங்களில் சிறப்பு முகாம் நடத்திட திட்டமிடப்பட்டு, 9.07.2017 அன்று மாவட்டத்திலுள்ள நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் இளம் வாக்காளர்களை சேர்ப்பதற்கான முதற்கட்ட சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

அதனடிப்படையில் இன்று (9.7.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் பரமக்குடி தாலுகாவிற்குட்பட்ட அலங்காரமாதா உயர்நிலைப்பள்ளி, சௌராஷ்டிரா மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் தாலுகாவிற்குட்பட்ட வீட்டுவசதிவாரிய குடியிருப்போர் சங்க உயர்நிலைப்பள்ளி, புனித ஆந்திரேயா மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற இளம் வாக்காளர்களை சேர்ப்பதற்கான முதற்கட்ட சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முகாமிற்கு வரும் பொதுமக்களின் தேவை அறிந்து உரிய விண்ணப்பங்களை வழங்கிடவும், விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய இயலாத பொது மக்களுக்கு உரிய விளக்கம் அளித்து விண்ணப்பங்களை பூர்த்தி செய்திட விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் எனவும், 23.07.2017 அன்று நடைபெறவுள்ள இளம் வாக்காளர்களை சேர்ப்பதற்கான இரண்டாவது சிறப்பு முகாம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுருத்தினார்.

இந்த ஆய்வின்போது வட்டாட்சியர்கள் திரு.ராஜகுரு (பரமக்குடி),திரு.நா.சண்முகசுந்தரம் (இராமநாதபுரம்) உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**